முறையில், விதையின் சத்துப்பொருள் கெடாத முறையில் பாதுகாக்க அரசாங்கம் தக்க நடவடிக்கை எடுத்து வருகிறது. உரிய விளைச்சலைத் தரத்தக்க அளவில் விதைகளைப் பாதுகாத்து வைக்கத்தக்க நடவடிக்கைகளை எடுத்து வருகிறோம்.

சிறப்பு அங்காடிகள்

* 283 வினா—திரு. என். மருதாசலம்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கோவையில் சூப்பர் மார்க்கெட்டுகள் எத்தனை உள்ளன ?

(இ) அவைகளில் எத்தனை தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த பணியாளர்கள் உள்ளனர் ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : (அ) கோவையில் "சிந்தாமணி" என்ற பெயரில் "கூட்டுறவு சிறப்பு அங்காடி" ஒன்று இயங்கி வருகிறது.

(இ) அதில் 6 தாழ்த்தப்பட்ட வகுப்பினரைச் சேர்ந்த பணியாளர்கள் உள்ளனர்.

* 284 வினா—திரு. கரு. சிமைச்சாமி: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

இராமநாதபுரத்தில் சிறப்பு அங்காடி ஏற்படுத்தும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : இல்லை.

திரு. கே. பி. எஸ். மணி: பேரவைத் தலைவர் அவர்களே, அந்த சூப்பர் மார்க்கெட்டில் 6 தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவர்கள் பணியாற்றுகிறார்கள் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அந்த ஆறு பேர்கள் என்னென்ன வேலைகளில் இருக்கிறார்கள் ? கிளெரிகல் செக்ஷனிலா அல்லது சுத்தப்படுத்துகின்ற பணியில் ஈடுபட்டிருக்கிறார்களா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: தலைவர் அவர்களே, என்னென்ன வேலைகளில் அவர்கள் இருக்கிறார்கள் என்ற விவரம் இப்போது என் கைவசம் இல்லை.

திரு. ஏ. அ. சுப்பராஜா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. இராமநாதபுரம் மாவட்டத்திலே சூப்பர் மார்க்கெட்டே இல்லை. அங்கே சிவகாசி, விருதுநகர், ராஜபாளையம் இந்த நகரங்களின் ஜனத்தொகையைக் கணக்கில் கொண்டு சூப்பர் மார்க்கெட் ஒன்றை ஆரம்பிக்க ஏதாவது செயல்திட்டம் உண்டா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : தலைவர் அவர்களே, இந்தச் சிறப்பு அங்காடி மத்திய அரசின் உதவியில் நடைபெறுகிறது. மத்திய அரசு ஒரு திட்டத்தின் அடிப்படையில் சிறப்பு அங்காடிகளுக்கு நிதி உதவுகிறது. எந்த நகரங்களில் ஒன்றரை

லட்சம் மக்களுக்கு அதிகமாக இருக்கிறார்களோ, அந்த நகரங்களில், நட்டம் வராமல் நடைபெறும் சாத்தியக்கூறுகள் இருந்தால், சிறப்பு அங்காடிகள் வைக்க மத்திய அரசு உதவி செய்கிறது. ராமநாதபுரம் மாவட்டத்தில், குறிப்பிட்ட இடங்களில், 1961-ம் ஆண்டு எடுத்த சென்ஸஸ்படி, முப்பதாயிரத்துக்கு மேல் ஜனத்தொகை இல்லை. ஆகவே, அங்கு சிறப்பு அங்காடி ஏற்படுத்தும் எண்ணம் இல்லை.

Minister for Co-operation—Governor of Reserve Bank meeting.

* 285. Q.—Thiru N. S. V. CHITHAN : Will the Hon. the Minister for Co-operation be pleased to state—

(*a*) whether he met the Governor of the Reserve Bank around 14th December 1969; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : (அ) ஆம்.

(இ) வீட்டு அடைமானக் கூட்டுறவுச் சங்கங்களால் வழங்கப்பட்ட கடன்களுக்காக அக்கூட்டுறவுச் சங்கங்கள் மறு கடன் உதவி பெறுவதற்கு வகை செய்வது குறித்து ரிசர்வ் வங்கி கவர்னருடன் விவாதிக்கப்பட்டது.

திரு. என். எஸ். வி. சித்தன் : பேரவைத் தலைவர் அவர்களே, ரிசர்வ் வங்கியிடம் வீட்டு அடைமானக் கூட்டுறவுச் சங்கங்களுக்காக எவ்வளவு பணம் கோரப்பட்டது? அதற்கு ரிசர்வ் பாங்க் கவர்னர் என்ன பதில் அளித்தார்? நிலவள வங்கி சம்பந்தமாக ஏதாவது பேசப்பட்டதா? அக்ரிகல்சுரல் ரிபைனான்ஸ் கார்ப்பரேஷன் சம்பந்தமாகப் பேசப்பட்டதா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : தலைவர் அவர்களே, அன்று பேசியது கூட்டுறவு வீட்டு அடைமான வங்கிகள் பற்றியது. அதைப்பற்றித்தான் அங்கு பேசப்பட்டது. எவ்வளவு பணம் வேண்டுமென்று கேட்கிற அளவிற்கு பேச்சு வரவில்லை. ஆனால், புதிதாக வீடுகளைக் கட்டுவதற்கு இந்தியா முழுவதற்கும் 2,000 கோடி ரூபாய் அளவிற்குப் பணம் தேவைப்படுகிறது. இருந்தும் நமது மாநிலத்திற்கு ஆண்டு ஒன்றுக்கு கடனாகக் கொடுப்பது 1 கோடி அல்லது 1½ கோடிக்கு மேல் இல்லை. ரீஃபைனான்ஸ், அதாவது மறுநிதி உதவி, ஏற்படுத்திக் கொடுத்தால் பெரிய அளவில் புதிய வீடுகளை நாங்கள் கட்டிக் கொடுக்க முடியும் என்று நான் அவரிடம் சொன்னபோது, அதைக் கவனிப்பதாகச் சொன்னதோடு மட்டுமல்லாமல், அவர்களே மறுநிதி உதவியின் அவசியத்தைப் பற்றிப் பேசிவிட்டுச் சென்றார்கள். ஆனால் பம்பாயில் இருந்து கடந்த மாத இறுதியில் வெளியிடப்பட்டுள்ள ஒரு அறிக்கையில், ரிசர்வ்பாங்கு ஹைபவர் கிரெடிட் போர்டு, அதாவது உயர்மட்ட அதிகாரக் குழு ஒன்றை நியமித்திருப்பதாகவும், அந்தக் குழு இனி விவசாய வங்கிகளுக்கு மட்டுமல்லாமல், கூட்டுறவுத் துறையிலே வீட்டு அடைமான வங்கிகளுக்கும் மறுநிதி உதவி செய்ய அதிகாரம் வழங்கப்பட்டிருக்கிறதென்றும் அறிவித்திருக்கிறது.